Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | |
|---|---|---|
| Calendar .. .. | } | |
| Miscellaneous .. .. | } | |
| Preliminary Register .. .. | } | **S.C. 90/2020** |
| Sessions .. .. | } | |
| | } | Prosecution – **PW12** |
| Deposition of witness for | } | Defence – |
| | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | சிவசாமி |
| Father/Husband Name | : | சுந்தரம் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | சார்பு ஆய்வாளர் |
| Religion | : | |
| Age | : | 46 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.11.2025.

(எதிரி ஆஜர். )

**முதன்மை விசாரணை:–**

நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம்திருப்புல்லாணி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.08.2019 ம் தேதி காலை 11.45 மணியளவில் இராமநாதபுரம் மாவட்டம் கேணிக்கரை காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பொறப்பில் இருந்த போது இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் இருந்த தகவலை பெற்று அங்கு சிகிச்சையில் இருந்த இராமநாதபுரம் கண்ணன் கோவில் தெருவை சேர்ந்த மீனாட்சி சுந்தரம் என்பவர் மகன் ராஜா என்பவரை விசாரித்தபோதுஅவர் பேச முடியாது நிலையில் இருந்ததால் அங்கிருந்த அவருடைய அம்மா மீனாட்சி என்பவரிடம் நடந்த சம்பவம் பற்றி விசாரித்து வாக்குமூலமாக பெற்று 13.00 மணிக்கு நிலையம் வந்து வாக்குமூலத்தின் தன்மைக்கு ஏற்ப நிலைய குற்ற எண். 293/2019 சட்டப்பிரிவுகள் 294(பி), 307 இதச படி வழக்கு பதிவு செய்தேன்.

நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.8.** முதல் தகவல் அறிக்கையை விரைவு தபாலாக நீதிமன்றத்தில் ஒப்படைக்க உத்தரவிட்டேன். ஒரு நகலை மேற்பார்வைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலம் பெறும்போது அடித்தல் திருத்தல்களோ மேலெழுந்த எழுத்துக்களோ, வெள்ளை மையினால் எழுதப்படவில்லை என்றால் சரியல்ல. எதற்காக எழுதினேன் என்றால் பெயர்திருத்தம் இருந்ததால் மாற்றம் செய்து எழுதினேன். எதிரியின் பெயரை மாற்றம் செய்யப்படவேண்டும் என்பதற்காக பின்னிட்டு வெள்ளைமை பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்று சொன்னால் சரியல்ல. யார் எதிரி என தெரியவில்லை என்பதால் பின்னிட்டு எதிரி பெயரை சேர்க்க வேண்டும் என்பதற்காக வெள்ளைமை (Whitener) பயன்படுத்தி எதிரி பெயர் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புகார் வாக்குமூலம் பெற்று நிலையத்திற்கு வந்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய அரை மணி நேரம் ஆனது என்றால் சரிதான். காவல் நிலையத்திலிருந்து நடந்து வந்தால் நீதிமன்றத்திற்கு 5 நிமிடத்தில் வந்துவிடலாம் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை 28 மணிநேரம் கழித்து காலதாமதத்துடன் நீதிமன்றத்தில் நடுவரால் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொன்ன மாதிரி சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் அரசு மருத்துவமனை சென்று மீனாட்சியிடம் வாக்குமூலம் பெறவில்லை என்றும், அதற்கேற்ப முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கிற்கு யார் எதிரி என்று தெரியவில்லை என்பதால்தான் எதிரியை முடிவு செய்து பின்னிட்டு ஆவணங்கள் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த எதிரிக்கும் வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.